<u>2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,</u>
<u>திருவள்ளூர் @ பூந்தமல்லி</u>

முன்னிலை : திருமதி.கு.புவனேஸ்வரி, பி.எல்.,
2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருவள்ளூர் @ பூந்தமல்லி
2026 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 16 ஆம் நாள் செவ்வாய்கிழமை

<u>குற்றவியல் மேல்முறையீட்டு வழக்கு எண்.217/2024</u>
<u>CNR No.TNTR08-000854-2024</u>

எந்த நீதிமன்றத்தின் தீர்ப்பு மற்றும் தண்டனைக்கு எதிராக இம்மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது	:	குற்றவியல் நடுவர், விரைவு நீதிமன்றம், பூந்தமல்லி.
விசாரணை நீதிமன்ற வழக்கு எண்.	:	**S.T.C. No.178/2022**
குற்றவியல் மேல்முறையீட்டு வழக்கு எண்	:	**C.A.No.217/2024**
மேல்முறையீட்டாளர் / எதிரியின் பெயர் மற்றும் விபரங்கள்	:	செந்தில் குமார் த/பெ. மூக்கன் @ ராமசாமி உரிமையாளர் மற்றும் அதிகாரம் பெற்ற கையொப்பமிட்டவர், M/s. ஸ்ரீ ராம் மார்க்கெட்டிங் எண்.8, 2 வது குறுக்குத் தெரு, கங்கை நகர், வேளச்சேரி, சென்னை – 600 042.
எதிர்மேல்முறையீட்டாளர் / புகார்தாரர்	:	R. வைத்தியநாதன் த/பெ. திரு. ராமகிருஷ்ணன், எண்.113, 6 வது குறுக்குத் தெரு, ராயல் கார்டன், காட்டுப்பாக்கம், சென்னை – 600056.

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.06.19 15:10:32 +0530

விசாரணை நீதிமன்றத்தால் பகரப்பட்ட தீர்ப்பு மற்றும் தண்டனை விபரம்	:	எதிரி மாற்றுமுறை ஆவணச் சட்டத்தின் பிரிவு 138–ன் கீழ் குற்றவாளி என்று தீர்ப்பளிக்கப்பட்டு குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் (Cr.PC) பிரிவு 255(2)–ன் கீழ் எதிரிக்கு ஒரு வருடம் மெய்க்காவல் சிறைத்தண்டனை விதிக்கப்படுகிறது. மேலும், எதிரி குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 357(3)ன் கீழ், ஒரு மாத காலத்திற்குள் புகார்தாரருக்கு ரூ.60,00,000/– (ரூபாய் அறுபது லட்சம் மட்டும்) இழப்பீடாக செலுத்த உத்தரவிடப்படுகிறார். இழப்பீட்டுத் தொகையை செலுத்தத் தவறினால், எதிரி ஒரு வாரம் மெய்க்காவல் சிறைத்தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்றும் தீர்ப்பளிக்கப்படுகிறது.
மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்புரை	:	முடிவாக, இந்த மேல்முறையீடு தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. விசாரணை நீதிமன்றம் S.T.C. No.178/2022 ல் 06.06.2024 அன்று வழங்கிய தீர்ப்புரை உறுதி செய்யப்படுகிறது. விசாரணை நீதிமன்றம் எதிரிக்கு வழங்கப்பட்ட தண்டனையை நிறைவேற்றும் பொருட்டு உரிய நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிடப்படுகிறது.

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.06.19 15:10:37 +0530

மேல்முறையீடு தாக்கல் செய்த நாள்	:	21.09.2024
மேல்முறையீடு கோப்புக்கு எடுத்த நாள்	:	24.10.2024
முன்னிலையான நாள்	:	24.10.2024
வாதுரை செய்யப்பட்ட நாள்	:	04.06.2026
தீர்ப்பு பகரப்பட்ட நாள்	:	16.06.2026

இம்மேல்முறையீடு 04.06.2026 அன்று இந்நீதிமன்றம் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மேல்முறையீட்டாளர்/எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் M/s. A. காளிமுத்து, M.Y. முகமது ரபி மற்றும் A. உக்கிரபாண்டி ஆகியோர் முன்னிலையாகியும், எதிர்மேல்முறையீட்டாளர்/புகார்தாரர் தரப்பில் M/s. E.T. நந்தகுமரன், MP.மதன்குமார், K. சுகுமார், S. பாரத ராஜா மற்றும் M. முகேஷ், ஆகியோர் முன்னிலையாகியும், தரப்பினர்கள் ஏற்று நடத்திய இவ்வழக்கில் இருதரப்பு வாதங்களைக் கேட்டும், விசாரணை நீதிமன்றத்தில் முன்னிடப்பட்ட வாய்மொழி சாட்சியம், சான்றாவணம் மற்றும் மேல்முறையீட்டுக்கான அடிப்படைக் காரணங்கள் ஆகியவற்றை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>தீர்ப்புரை</u>

குற்றவியல் மேல்முறையீடு வழக்கு குற்றவியல் நடுவர், விரைவு நீதிமன்றம், பூந்தமல்லி அவர்களால் 06.06.2024 அன்று S.T.C. No.178/2022 ல் வழங்கப்பட்ட தீர்ப்புரையை ரத்து செய்து

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.06.19 15:10:41 +0530

இம்மேல்முறையீட்டை அனுமதிக்கக் கோரி மேல்முறையீட்டாளர்/ எதிரியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. விசாரணை நீதிமன்றத்தில் எதிரி இந்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்பவராகவும், புகார்தாரர் எதிர்மேல்முறையீட்டாளராகவும் உள்ளனர்.

3. <u>விசாரணை நீதிமன்றத்தில் புகார்தாரர் தாக்கல் செய்த குற்ற முறையீட்டின் சுருக்கம் பின்வருமாறு</u>:–

எதிரியும் அவரது நண்பரான திரு. சி. கோபியும் இணைந்து, அண்ணா நகர், மடிப்பாக்கம், சென்னையில் அமைந்துள்ள ஒரு காலி மனையை விற்பனை செய்வதற்காக புகார்தாரரை அணுகினர். அதன்படி, எதிரி, பழைய சர்வே எண்.154/2B மற்றும் புதிய சர்வே எண்.154/212–இல் அடங்கிய, சென்னை–600091, அண்ணா நகர், 2 வது தெரு, ப்ளாட் எண்.16–ஐ புகார்தாரருக்கு இரண்டு விற்பனை ஆவணங்கள் மூலம் முடித்துக் கொடுத்தார். மேற்குப் பகுதி (1,200 சதுர அடி) 05.07.2021 தேதியிட்ட ஆவண எண்.3759/2021–ன் கீழும், கிழக்குப் பகுதி 06.07.2021 தேதியிட்ட ஆவண எண்.3798/2021–ன் கீழும், வேளச்சேரி துணைப் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டன. இவை ஒவ்வொன்றும் ரூ.46,00,000/– விற்பனைத் தொகையாகக் கொண்டிருந்தன. மொத்தம் ரூ.92,00,000/– ஆகும். அதன் பிறகு புகார்தாரரால் மேற்படி ஆவணங்களில் பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன: (i) 21.08.1985 தேதியிட்ட விற்பனை ஆவணம் எண்.2733/1985–இல் குறிப்பிடப்பட்டுள்ள 6.30 சென்ட் என்பதற்கும், 03.12.2019 தேதியிட்ட செட்டில்மென்ட் ஆவண

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.06.19 15:10:46 +0530

எண்.7484/2019–இல் குறிப்பிடப்பட்டுள்ள 2400 சதுர அடிக்கும் இடையே உள்ள வேறுபாடு; (ii) ஆவணங்களுக்கிடையே எல்லைகளில் வேறுபாடு; (iii) அளவீடுகளில் வேறுபாடு – செட்டில்மென்ட் ஆவணத்தில் 2400 சதுர அடி என்று குறிப்பிடப்பட்டிருந்த நிலையில், எஃப்.எம்.பி–யில் 2170 சதுர அடி மட்டுமே இருந்தது; (iv) தெளிவான மூல ஆவணங்கள் தாக்கல் செய்யப்படாதது; (v) அறியப்படாத நபர்களால் சொத்தின் கேட் பூட்டப்பட்டது மற்றும் அதற்கு எதிரியிடமிருந்து சரியான விளக்கம் இல்லாமை ஆகியவை ஆகும் தொடர்ந்து பின்தொடர்ந்தும், எதிரி குறைபாடுகளைச் சரிசெய்யத் தவறிவிட்டார். மேலும், கோவிட்–19 தொற்றுநோய் மற்றும் அவரது தந்தையின் முதுமை காரணமாக திருத்தம் செய்ய முடியாது என்றும் குறைபாடுகளைச் சரிசெய்ய முடியாது என்று தெரிவித்தார். எனவே, 15.12.2021 அன்று எதிரி ஒரு உறுதிமொழி ஆவணத்தை (undertaking deed) ஏற்படுத்தி, 05.07.2021 தேதியிட்ட ஆவண எண்.3759/2021 மற்றும் 06.07.2021 தேதியிட்ட ஆவண எண்.3798/2021 ஆகிய விற்பனை ஆவணங்கள் தொடர்பான குறைபாடுகளைத் தாமும் திரு. சி. கோபியும் சரிசெய்ய இயலாது என்றும், மொத்த விற்பனைத் தொகை ரூ.92,00,000/– மற்றும் ஆவணச் செலவுகள் ரூ.6,00,000/– சேர்த்து மொத்தம் ரூ.98,00,000/–ஐ 23.12.2021–க்குள் திருப்பிச் செலுத்துவதாகவும் கூறினார். மேலும், திரு. சி. கோபி 09.12.2021 அன்று ஒரு உறதிமொழி ஆவணம் (undertaking deed) ஏற்படுத்தி இந்தப் பரிவர்த்தனையிலிருந்து தனக்கு நிதிப் பலன் கிடைத்ததை ஒப்புக்கொண்டு, ரூ.98,00,000/–ஐ புகார்தாரருக்குத் திருப்பிச் செலுத்த

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.06.19 15:10:52 +0530

இசைந்தார். எதிரியும் திரு. சி. கோபியும் தமது ஒப்பந்தத்தை நிறைவேற்றத் தவறியதால், புகார்தாரர் விற்பனை ஆவணங்களை ரத்து செய்ய முடிவெடுத்து, ரூ.98,00,000/-ஐ திருப்பிக் கேட்டார். அதன்படி, 19.01.2022 தேதியிட்ட சட்ட அறிவிப்பு எதிரி மற்றும் திரு. சி. கோபிக்கு அனுப்பப்பட்டது. அதில், 15 நாட்களுக்குள் பணத்தைத் திருப்பிச் செலுத்தி, விற்பனை ஆவணங்களை ரத்து செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. எதிரி 20.01.2022 அன்று அறிவிப்பை பெற்றுக்கொண்டு, 25.01.2022 அன்று பதில் அறிவிப்பு அனுப்பினார். அதில், குறைபாடுகளைச் சரிசெய்ய இயலாது என்றும், ரூ.98,00,000/-ஐ திருப்பிச் செலுத்த இசைவதாகவும் தெரிவித்தார். அதே நாளில், எதிரி தமது பங்குத் தொகையான ரூ.47,00,000/-க்கு, 29.01.2022 என்று பின் தேதியிட்ட காசோலை (post-dated cheque) எண்.598879-ஐ, கனரா வங்கி, வேளச்சேரி கிளையில் வரைந்து, புகார்தாரருக்கு வழங்கினார். புகார்தாரர், அந்தக் காசோலையை தமது வங்கியான கனரா வங்கி, பூந்தமல்லி கிளை மூலம் 29.01.2022 அன்று வங்கிக்கு செலுத்தினார். 31.01.2022 அன்று அந்தக் காசோலை "நிதி போதுமானதாக இல்லை" (Funds Insufficient) என்று திருப்பப்பட்டது. அதன்பிறகு, புகார்தாரர் 01.02.2022 அன்று தமது வழக்கறிஞர் மூலம் சட்டப்பூர்வ அறிவிப்பு அனுப்பி, காசோலைத் தொகையைச் செலுத்துமாறு எதிரியை கேட்டுக் கொண்டார். எதிரி 03.02.2022 அன்று அறிவிப்பை பெற்றுக்கொண்டும், பணம் செலுத்தத் தவறிவிட்டார். எனவே, புகார்தாரர், மாற்றுமுறையாவணச் சட்டத்தின் கீழ், பரிந்துரைக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் இந்த வழக்குத்

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.06.19 15:10:56 +0530

தொடர்ந்துள்ளார்.

4. விசாரணை நீதிமன்றத்தில் புகார்தாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.9 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை. விசாரணை நீதிமன்றம் முழுமையான விசாரணைக்குப் பிறகு மேல்முறையீட்டாளர் எதிரியை குற்றவாளி என்று முடிவு செய்து தண்டனை தீர்ப்பு வழங்கியுள்ளதில் மனக்குறைவுற்ற எதிரி இந்த குற்றவியல் மேல்முறையீட்டை தாக்கல் செய்துள்ளனர்.

5. **மேல்முறையீட்டாளர்/எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேல்முறையீட்டுக்கான காரணங்களின் சுருக்கம்:–**

விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு சட்டத்திற்கும், ஆதாரங்களுக்கும், வழக்கின் சாத்தியக் கூறுகளுக்கும் முரணானது. புகார்தாரர், முக்கியமான உண்மைகள் மற்றும் ஆவணங்களை மறைத்து நீதிமன்றத்தை அணுகியுள்ளார், சட்டப் பயன்பாட்டை தவறாகப் பயன்படுத்தியுள்ளார், மற்றும் நீதிமன்றத்தைத் தவறாக வழிநடத்தி மேல்முறையீட்டாளரின் தண்டனையைப் பெற்றுள்ளார்.

சட்டப்பூர்வமாக நிறைவேற்றத்தக்க கடன் அல்லது பொறுப்பு இருந்ததா என்பதை ஆய்வு செய்யாமல், மாற்றுமுறையாவன சட்டத்தின் கீழ் உள்ள அனுமானத்தை விசாரணை நீதிமன்றம் இயந்திரத்தனமாகப் பயன்படுத்தியள்ளது புகார்தாரர், விற்பனை பத்திரங்கள் மற்றும் பிற முக்கிய ஆவணங்களை மறைத்துள்ளார்,

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.06.19 15:11:00 +0530

சொத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் விற்பனை தொகை ரூ.46,00,000/- என தவறாகக் கூறியுள்ளார், ஆனால் விற்பனை பத்திரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள உண்மையான தொகை ரூ.20,50,000/- மட்டுமே ஆகும், இதன்மூலம் நீதிமன்றத்தை தவறாக வழிநடத்தியுள்ளார். மேலும், புகார்தாரர், சொத்தின் வாங்குபவர் என்பதால், "கேவியட் எம்ப்டர்" (Caveat Emptor) வாங்குபவர் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்ற கொள்கையால் கட்டுப்படுத்தப்படுகிறார், மேலும் 05.07.2021 மற்றும் 06.07.2021 தேதியிட்ட விற்பனை பத்திரங்கள் பதிவு செய்யப்படுவதற்கு முன்பு, உரிமை மற்றும் பிற அம்சங்களை சரிபார்த்துள்ளார். எனவே, மேல்முறையீட்டாளர் மீதான அடுத்தடுத்த பொறுப்பு கோரிக்கை மறுக்கப்படுகிறது. மேல்முறையீட்டாளர் ரூ.98,00,000/- செலுத்த பொறுப்பானவர் என்று விசாரணை நீதிமன்றம் தவறாக முடிவு செய்துள்ளது என்றும், புகார்தாரர், திரு. சி. கோபி என்ற மற்றொரு நபரிடமிருந்தும் அந்த தொகையை கோரியுள்ளதால், மேல்முறையீட்டாளர் மட்டுமே பொறுப்பல்ல என்பதை கருத்தில் கொள்ளத் தவறிவிட்டது. காசோலை தொகை ரூ.47,00,000/- மட்டுமே இருக்கும் போது, ரூ.60,00,000/- இழப்பீடு வழங்கப்பட்டது நியாயமற்றது.

மேல்முறையீட்டாளர், இரட்டை ஆபத்து என்ற கோரிக்கையையும் எழுப்புகிறார், அதாவது, அதே பரிவர்த்தனை மற்றும் உண்மைகளின் அடிப்படையில், சென்னை CCB-I முன் Crime No.114 / 2024 என்ற எண்ணில் பதிவு செய்யப்பட்டுள்ள அடுத்தடுத்த மோசடி வழக்கு, இந்திய அரசியலமைப்பின் பிரிவு 20(2) கீழ் தடைசெய்யப்பட்டுள்ளது.

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.06.19 15:11:04 +0530

எனவே, விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பை ரத்து செய்து மேல்முறையீட்டை அனுமதிக்க வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

6. <u>தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை</u>:–

குற்றவியல் மேல்முறையீட்டு வழக்கு அனுமதிக்கத்தக்கதா? என்பதாகும்.

<u>பிரச்சனை</u>:–

7. இருதரப்பும் கேட்கப்பட்டது. விசாரணை நீதிமன்ற ஆவணங்கள், சாட்சியங்கள் மற்றும் மேல்முறையீட்டு அடிப்படைக் காரணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மேல்முறையீட்டாளர் **S.T.C. No.178/2022** ன் எதிரி ஆவார். விசாரணை நீதிமன்றம் எதிரி மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் கீழ் குற்றவாளி எனத் தீர்மானித்து சிறைத் தண்டனை மற்றும் இழப்பீடு விதித்து தீர்ப்பளித்துள்ளது. விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பினால் மனக்குறைவுற்ற எதிரி இந்த மேல்முறையீட்டை தாக்கல் செய்துள்ளார்.

8. விசாரணை நீதிமன்றத்தில் எதிர்மேல்முறையீட்டாளர் / புகார்தாரர் தனது குற்றமுறையீட்டு சங்கதிகளை உறுதியூட்டி முதல் விசாரணை பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்து ம.சா.ஆ.1 முதல் 9 வரை ஆவணங்களை குறியீடு செய்துள்ளார்.

9. மாற்றுமுறை ஆவணச் சட்டத்தின் பிரிவு 138–ன் கீழ் குற்றத்தை நிரூபிக்க முதலில் அந்த பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை கூறுகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். மாற்றுமுறை ஆவணச் சட்டத்தின் பிரிவு 138–ன் கீழ் குற்றம் நிறுவ தேவையான கூறுகள்:

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.06.19 15:11:08 +0530

1. ஒரு நபரால் தனது வங்கியில் தான் பராமரித்து வரும் கணக்கில் மற்றொரு நபருக்கு எந்தவொரு தொகையையும் செலுத்தும் வகையில் காசோலை வரையப்பட வேண்டும்.

2. மற்றொரு நபருக்கு செலுத்தப்பட வேண்டிய அந்த தொகையானது, முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ, ஏதேனும் ஒரு கடன் அல்லது பிற பொறுப்பைத் தீர்ப்பதற்காக இருக்க வேண்டும்.

3. வரையப்பட்ட அந்தக் காசோலையானது, காசோலையைச் செலுத்த கணக்கில் போதுமான தொகை இல்லை அல்லது அது ஏற்பாடுகளை மீறுகிறது என்ற காரணத்திற்காக, சம்பந்தப்பட்ட வங்கியால் செலுத்தப்படாமல் திருப்பி அனுப்பப்பட வேண்டும்.

4. அத்தகைய காசோலையானது, அது வரையப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள் அல்லது அதன் செல்லுபடியாகும் காலத்திற்குள் வங்கியில் செலுத்தி வைக்கப்பட வேண்டும்.

5. காசோலை பெறுபவர் அல்லது உரிய காலத்தில் அதைப் பெற்றவர், காசோலை செலுத்தப்படாமல் திரும்பியது குறித்த தகவலை வங்கியிலிருந்து பெற்ற தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள், கடன் அல்லது பொறுப்புத் தொகையை திருப்பிச் செலுத்தக் கோரி, காசோலையை வரைந்தவருக்கு அறிவிப்பு அனுப்பியிருக்க வேண்டும்.

6. அத்தகைய காசோலையை வரைந்தவர், மேற்படி சட்ட அறிவிப்பை பெற்ற தேதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குள், காசோலை தொகையைப் பெறுபவருக்கோ அல்லது உரிய காலத்தில் அதைப் பெற்றவருக்கோ திருப்பிச் செலுத்தத் தவறியிருக்க வேண்டும் என்பவையாகும்.

G
BHUVANESWARI

Digitally signed
by G
BHUVANESWARI
Date: 2026.06.19
15:11:12 +0530

10. விசாரணை நீதிமன்றத்தில் குறைமுறையீட்டாளர் தரப்பில் 05.07.2021 தேதியிட்ட புகார்தாரர் எதிரிக்கு அனுப்பிய கடிதம் ம.சா.ஆ.1 ஆகவும், 15.12.2021 தேதியிட்ட செயலுறுதிப் பத்திரம் ம.சா.ஆ.2 ஆகவும், 19.01.2022 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு ம.சா.ஆ.3 ஆகவும், 20.01.2022 தேதியிட்ட ஒப்புதல் அட்டை ம.சா.ஆ.4 ஆகவும், 25.01.2022 தேதியிட்ட பதில் வழக்கறிஞர் அறிவிப்பு ம.சா.ஆ.5 ஆகவும், 29.01.2022 தேதியிட்ட காசோலை எண்.598879 ம.சா.ஆ.6 ஆகவும், 31.01.2022 தேதியிட்ட Return memo ம.சா.ஆ.7 ஆகவும், 01.02.2022 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு ம.சா.ஆ.8 ஆகவும், ஒப்புதல் அட்டை ம.சா.ஆ.9 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.9 லிருந்து புகார்தாரர் தரப்பில் மாற்றுமுறை ஆவணச் சட்டம் 138 ன் கீழான நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன என்பது தெரியவருகிறது.

11. விசாரணை நீதிமன்றத்தில் எதிர்மேல்முறையீட்டாளர் / புகார்தாரர் மேல்முறையீட்டாளர் / எதிரியால் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. விசாரணை நீதிமன்றம் புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்வதற்கு எதிரிக்கு பல்வேறு வாய்ப்புகள் வழங்கப்பட்டதாகவும், ஆனால் மேல்முறையீட்டாளர் / எதிரி புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்வதற்கு முன்வரவில்லை என்றும் எனவே புகார்தாரர் தரப்பு சாட்சியங்கள் முடிக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளது.

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.06.19 15:11:17 +0530

12. மாற்றுமுறையாவண சட்டம், 1881–ன் பிரிவு 138 ஆனது காசோலைகளை திரும்பப் பெறுவதை குற்றமாக்குகிறது. "ஒரு நபர் தனது வங்கியாளரிடம் தான் பராமரிக்கும் கணக்கில், எந்தவொரு கடன் அல்லது பிற பொறுப்பை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிறைவேற்ற, வேறொரு நபருக்கு பணம் செலுத்துவதற்காக வரைந்த எந்த காசோலையும், அந்த கணக்கில் உள்ள தொகை காசோலையை செலுத்த போதுமானதாக இல்லை அல்லது அந்த வங்கியுடனான ஒப்பந்தத்தின் மூலம் அந்த கணக்கிலிருந்து செலுத்த ஏற்பாடு செய்யப்பட்ட தொகையை விட அதிகமாக இருப்பதாக, வங்கியால் செலுத்தப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டால், அத்தகைய நபர் குற்றம் செய்ததாக கருதப்படுவார், மேலும் இந்த சட்டத்தின் பிற விதிகளுக்கு பாதிப்பு இல்லாமல், இரண்டு ஆண்டுகள் வரை நீட்டிக்கக்கூடிய காலத்திற்கு சிறைத்தண்டனை அல்லது காசோலைத் தொகையை விட இரு மடங்கு வரை அபராதம் அல்லது இரண்டும் கொண்டு தண்டிக்கப்படுவார் என்று வரையறுக்கிறது.

13. புகார் சங்கதிகள் மற்றும் சான்றாவணங்களிலிருந்து, மேல்முறையீட்டளார் / எதிரி சட்டப்பூர்வமாக நிறைவேற்றத்தக்க கடனை திருப்பிச் செலுத்துவதற்காக புகார்தாரருக்கு ரூ.47,00,000/–க்கான ம.சா.ஆ.6 காசோலையை வழங்கியுள்ளார் என்பது தெளிவாகிறது. மேலும் மேல்முறையீட்டாளர் / எதிரி ம.சா.ஆ.5 தேதி 25.01.2022 கடிதத்தின் மூலமாகவும் புகார்தாரருக்கு பொறுப்பை ஒப்புக் கொண்டுள்ளார். ம.சா.ஆ.8 சட்டப்பூர்வ அறிவிப்பு 01.02.2022 அன்று எதிரிக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதற்கு மேல்முறையீட்டளார் /

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.06.19 15:11:21 +0530

எதிரியால் எந்த பதிலும் அளிக்கப்படவில்லை.

14. விசாரணை நீதிமன்றத்தில் மேல்முறையீட்டாளர் / எதிரி குறுக்கு விசாரணை செய்வதற்காக வழக்கு பலமுறை ஒத்திவைக்கப்பட்டு எதிரிக்கு பல்வேறு வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன என்பதும் ஆனால் எதிரி புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்வதற்கு முன்வரவில்லை என்பதும் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 313–ன் கீழ் வினவப்பட்ட போதும் எதிரி புகார்தாரரின் ஆதாரங்களை வெறுமனே மறுத்துள்ளார் என்பதும் தெரியவருகிறது.

15. விசாரணை நீதிமன்றம், மேல்முறையீட்டாளர் / எதிரியிடம் இறுதி கேள்வி கேட்டதற்கு பின்னரும் கூட, மேல்முறையீட்டாளர் /எதிரி வழக்கை சமரசம் செய்து கொள்ள ஒரு மனு தாக்கல் செய்ததாகவும், மேலும் எதிரி சமரசத்திற்காக 4 மனுக்கள் தாக்கல் செய்து வழக்கை மேலும் நீடித்ததாகவும் வழக்கு நீதிமன்றத்திற்கு வெளியே சமரசம் செய்யப்பட்டதாக இரு தரப்பினராலும் தெரிவிக்கப்படவில்லை என்றும் எந்தவொரு ஆதாரத்தையோ அல்லது எந்த சூழ்நிலைகளின் மூலமாகவோ வழங்காமல், புகார்தாரரின் ஆதாரங்களை வெறுமனே மறுப்பது, புகார்தாரருக்கு சாதகமான ஆரம்ப அனுமானத்தை மறுக்காது என்றும் மேலும், எதிரி புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்வதற்கு முன்வரவில்லை, அல்லது தனது பாதுகாப்பை நிலைநாட்டுவதற்கு பாதுகாப்பு தரப்பில் எந்த ஆதாரத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றும் ஆதலால், புகார்தாரருக்கு சாதகமான ஆரம்ப அனுமானங்கள் எதிரியால் மறுக்கப்படவில்லை என்றும் விவாதித்துள்ளது சரியானதென்று இந்நீதிமன்றமும் கருதுகிறது.

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.06.19 15:11:27 +0530

16. மேல்முறையீட்டாளர் / எதிரி விசாரணை நீதிமன்றத்தில் தனது சாட்சியத்தில் குறுக்கு விசாரணையின் போது S.T.C. No.178/2022 வழக்கில் புகாரதாரரின் ம.சா.ஆ.1ன் காசோலையின் படி ரூ.47,00,000/- தொகை கடனாக வழங்கப்பட்டதாகக் கூறப்படும் உண்மையானது தன்னால் மறுக்கப்படவில்லை என்றும் மேற்கூறிய உண்மையை தற்போதைய வழக்கிலும் தான் மறுக்கவில்லை என்றும் ஒப்புக்கொண்டுள்ளார்.

17. விசாரணை நீதிமன்றம் எந்தச் சூழ்நிலைகளில் காசோலையானது புகார்தாரரின் கைகளுக்குச் சென்றது என்பதைக் காட்டும் சாட்சியங்களையும் எதிரி தரப்பில் முன்னிடவில்லை என்றும் சட்டப்பூர்வ அறிவிப்பை பெற்ற பின்னரும் எதிரி எந்தப் பதில் அறிவிப்பையும் அனுப்பவில்லை என்றும் இதிலிருந்து, புகார்தாரரின் வழக்கு உண்மையானது என்பது தெளிவாகிறது என்றும் எதிரி தனது விசாரணையின் போது பரிவர்த்தனையை ஒப்புக்கொண்டுள்ள நிலையில் புகார்தாரரின் வழக்கை மறுத்து தனது பாதுகாப்பை நிகழ்தகவுடன் நிரூபிக்க எதிரி தவறிவிட்டதாகவும் வழக்கு காசோலையானது எதிரியால் அவரது சட்டப்பூர்வமாக நிறைவேற்றத்தக்க கடன் அல்லது பொறுப்புக்காக வழங்கப்பட்டது என்பது புகார்தாரர் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும் எனவே எதிரி குற்றவாளி என்று தீர்மானித்துள்ளதும் சரியானதென்றே இந்நீதிமன்றமும் கருதுகிறது.

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.06.19 15:11:31 +0530

18. மேற்கண்ட விவாதங்களின் அடிப்படையில், விசாரணை நீதிமன்றம் மேல்முறையீட்டாளர் / எதிரியை மாற்றுமுறை ஆவணச் சட்டத்தின் பிரிவு 138–ன் கீழ் குற்றவாளி என்று தீர்மானித்து குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 255 (2)ன் படி தண்டனை தீர்ப்பு வழங்கியும் இழப்பீடு விதித்தும் தீர்ப்பளித்துள்ளது சரியானதே என்றும் விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பில் தலையிட எவ்வித முகாந்திரமும் இல்லை என்றும் இந்நீதிமன்றமும் தீர்மானித்து மேல்முறையீட்டை தள்ளுபடி செய்வதென முடிவு செய்கிறது.

முடிவாக, இந்த மேல்முறையீடு தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. விசாரணை நீதிமன்றம் S.T.C. No.178/2022 ல் 06.06.2024 அன்று வழங்கிய தீர்ப்புரை உறுதி செய்யப்படுகிறது. விசாரணை நீதிமன்றம் எதிரிக்கு வழங்கப்பட்ட தண்டனையை நிறைவேற்றும் பொருட்டு உரிய நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிடப்படுகிறது.

என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்து சரிபார்க்கப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 16 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.06.19 15:11:37 +0530

2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருவள்ளூர் @ பூந்தமல்லி

நகல்: குற்றவியல் நடுவர், விரைவு நீதிமன்றம், பூந்தமல்லி.

<u>தீர்ப்புரை</u>
குற்றவியல் மேல்முறையீட்டு
வழக்கு எண்.217/2024
நாள். 16.06.2026
2 வது கூ.மா.அ.நீ
பூந்தமல்லி